SANTHANA TNPSC. THIYAGADURGAM.
CELL: 8760273175

# தமிழ் இலக்கணம்

## மாத்திரை

| எழுத்து | மாத்திரை |
|---|---|
| உயிர் குறில் - அ<br>உயிர்மெய் குறில் - க (க் + அ)<br>முற்றியலுகரம்<br>ஒற்றளபெடை | 1 |
| உயிர்நெடில் - ஆ<br>உயிர்மெய்நெடில் - கா (க் + ஆ) | 2 |
| மெய் எழுத்து<br>ஆய்தம்<br>குற்றியலுகரம்<br>குற்றியலிகரம் | ½ |
| மகரகுறுக்கம்<br>ஆய்தகுறுக்கம் | ¼ |
| உயிரளபெடை | 3 |
| ஐகாரம் (முதல், இடை, கடை) | 1 ½ ,1, 1 |
| ஔகாரம் | 1 ½ |

SANTHANA TNPSC. 8760273175
www.Padasalai.Net

➪ உயிர் எழுத்து (12) :

குறில் (5) = அ, இ, உ. எ. ஒ

நெடில் (7) = ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

வல்லினம் = க, ச, ட, த, ப, ற

மெல்லினம் = ங, ஞ, ண, ந, ம, ன

இடையினம் = ய, ர, ல, வ, ழ, ள

➪ தமிழ் இலக்கணம்

1) எழுத்து
2) சொல்
3) பொருள்
4) யாப்பு
5) அணி

# 1. எழுத்து

## முதலெழுத்து (30)

உயிரெழுத்து(12) மெய்யெழுத்து(18)

12 × 18 = 216 உயிர்மெய் எழுத்துக்கள் தோன்றும்.

## சார்பெழுத்து (10)

- உயிர்மெய்
- ஆய்தம்
- உயிரளபெடை
- ஒற்றளபெடை
- குற்றியலுகரம்
- குற்றியலிகரம்
- ஐகாரகுறுக்கம்
- ஔகாரகுறுக்கம்
- மகரகுறுக்கம்
- ஆய்தகுறுக்கம்

### ⇔ ஆய்தம்

- ஃ ஐ அஃகேனம் , முப்புள்ளி , முப்பாற்புள்ளி , ஆய்தம் என பலவாறாக கூறலாம்.
- உயிரோடும்,மெய்யோடும் சேராமல் இருப்பதால் இதனை தனிநிலை எனவும் கூறுவர்.
- ஆய்த எழுத்து ஒரு சொல்லின் இடையில் மட்டுமே வரும். அவ்வெழுத்தின் முன் குறிலும், அதன் பின் வல்லின உயிர்மெய் குறிலும் வரும்.

### ⇔ அளபெடை (2)

- செய்யுளின் ஓசை குறையும் போது ஒரு சொல்லின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துக்கள் தமக்குரிய 2 மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீண்டு ஒலிப்பதை அளபெடை என்கிறோம்
- அளவு = மாத்திரை , எடை = எடுத்தல் என்பது பொருள்.
- எழுத்தினது மாத்திரை அளவில் நீட்டி ஒலித்தல்
- அளபெடை 2 வகைப்படும். அவை, 1) உயிரளபெடை, 2) ஒற்றளபெடை

### ⇔ உயிரளபெடை (3)

- செய்யுளில் ஓசை குறையும் போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துக்கள் ஏழும் அளபெடுக்கும். இஃது உயிரளபெடை எனப்படும்
- அவ்வாறு அளபெடுக்கும் போது, அவற்றுக்கு இனமான குறில் எழுத்துக்கள் அதன் பக்கத்தில் வரும்.
- ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இன எழுத்தாக வரும்

www.Padasalai.Net SANTHANA TNPSC, 8760273175

- உயிரளபெடை 3 வகைப்படும். அவை,
  1. சொல்லிசை அளபெடை
  2. செய்யுளிசை அளபெடை
  3. இன்னிசை அளபெடை

## ⇔ செய்யுளிசை அளபெடை (அ) இசைநிறை அளபெடை

- செய்யுளில் இசையை நிறைக்க வரும் அளபெடை செய்யுளிசை அளபெடை என்பர்
- ஈரசை சீர்களாக வரும் ( ஆ, ஏ, ஓ) என முடியும்

(எகா)

படா அமை

விடா அது

(நெடில் (ஆ) , குறில் (அ) )

## ⇔ இன்னிசை அளபெடை

- ஓசை குறையாவிட்டாலும் இனிய ஓசைக்காக அளபெடுத்தலை இன்னிசை அளபெடை என்பர்.
- உம் என முடியும்.
- மூன்று அசைகளை கொண்ட காய்சீராக வரும்

(எகா) உடுப்பதூஉம்

உண்பதூஉம்

## ⇔ சொல்லிசை அளபெடை

- இவ்விரண்டும் அல்லாமல், ஒருசொல் மற்றொரு சொல்லாக பொருள்பட வரும் அளபெடை சொல்லிசை அளபெடை ஆகும்.
- சொல்லிசை அளபெடை "இ" என முடியும். (எகா) உரனசைஇ, வரனசைஇ, குடிதழீஇ
- செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் பெயர்ச்சொல், வினையெச்சம் பொருள் தரும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும்

  பெயர்சொல் + இ = வினையெச்சம்

## ⇔ ஒற்றளபெடை

- செய்யுளில் ஓசை குறைந்தால் மெய்யெழுத்துகளும் அளபெடுக்கும். இஃது ஒற்றளபெடை எனப்படும்.

(எகா) எங்ங்கி

வெஃஃகுவார்க்.

- வல்லினத்து "க், ச், ட், த், ப், ற்" என்னும் ஆறும்
- இடையினத்தில் "ர், ழ்" என்னும் இரண்டும் ஆக இந்த 8 மெய் எழுத்துகளை தவிர 10 மெய் எழுத்துக்கள் ஒற்றளபெடையில் அளபெடுக்கும்
- ( ங்,ஞ்ண்,ந்,ம்,ன்,ய்,ல்,வ்,ள், ஃ ) என்னும் 10 மெய் எழுத்து + 1 ஆய்த எழுத்து மொத்தம் 11 எழுத்துக்கள் ஒற்றளபெடையில் அளபெடுக்கும்.

SANTHANA TNPSC. 8760273175
www.Padasalai.Net

## ⇔ குற்றியலுகரம் (6)

- குற்றியலுகரம் = குறுமை + இயல் + உகரம்
- குறுகிய ஓசையை கொண்ட உகரம்
- ஆறு வல்லின மெய் எழுத்துக்களை பெற்று உகரம் வரும்

| |
|---|
| க் + உ = கு |
| ச் + உ = சு |
| ட் + உ = டு |
| த் + உ = து |
| ப் + உ = பு |
| ற் + உ = று |

⇨ இவற்றை அடிப்படையாக கொண்டுதான் குற்றியலுகரம் தோன்றும்

- குற்றியலுகரம் 6 வகைப்படும். அவை
  1. நெடில் தொடர் குற்றியலுகரம்
  2. ஆய்த தொடர் குற்றியலுகரம்
  3. உயிர் தொடர் குற்றியலுகரம்
  4. வன் தொடர் குற்றியலுகரம்
  5. மென் தொடர் குற்றியலுகரம்
  6. இடைத் தொடர் குற்றியலுகரம்

### ⇒ நெடில் தொடர் குற்றியலுகரம்

- நெடில் தொடர் குற்றியலுகரம் எப்பொழுதும் இரண்டு எழுத்துகளை பெற்றுவரும்.
- முதலாவது எழுத்து எப்பொழுதும் நெடிலாகவே வரும்.
- இரண்டாவது எழுத்து (கு, சு, டு, து, பு, று) இவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும்

(எகா)

நாகு, காசு, மாது, கோபு, ஆறு, ஆடு, வீடு

### ⇒ ஆய்தத் தொடர் குற்றியலிகரம்

- (கு, சு, டு , து, பு, று) வல்லின மெய்களின் ஊர்ந்த உகரமானது ஆய்த எழுத்தை அடுத்த வந்தல் அது ஆய்தத்தொடர் குற்றியலுகரம் எனப்படும்.

(எகா)

எஃகு, கஃசு, அஃது

### ⇒ உயிர் தொடர் குற்றியலுகரம்

(எகா) அழகு, அரசு, பண்பாடு, உருபு, பாலாறு

( ழ் + அ = ழ , ர் + அ = ர, ப் + ஆ = பா, ர் + உ = ரு, ல் + ஆ = லா)

SANTHANA TNPSC 8760273175
www.Padasalai.Net

⇒ **வல்லினத் தொடர் குற்றியலுகரம்:** (எகா) சுக்கு, கச்சு, பட்டு

⇒ **மெல்லினத் தொடர் குற்றியலுகரம்:** (எகா) சங்கு, மஞ்சு, நண்டு

⇒ **இடையினத் தொடர் குற்றியலுகரம்:**(எகா) கொய்து, சார்பு, மூழ்கு

## ⇔ குற்றியலிகரம்

- ❖ குற்றியலிகரம் = குறுமை + இயல் + இகரம்
- ❖ குறுகிய ஓசையுடை இகரம் குற்றியலிகரம் எனப்படும்

(எகா) நாகு (நிலைமொழி) + யாது (வருமொழி) = நாகியாது, வீடு (நிலைமொழி) + யாது (வரும்மொழி) = வீடியாது

- ❖ நாகு, வீடு என்பன நெடில் தொடர் குற்றியலுகர சொற்கள். இவை நிலை மொழியாய் நிற்க, வருமொழியின் முதல் எழுத்து 'ய' கரமாக இருப்பின் உகரம் இகரமாகும்
- ❖ இந்த இகரம் தான் குற்றியலிகரம் எனப்படும்
- ❖ நிலைமொழி குற்றியலுகரமாக இருந்து, வருமொழி "ய"கரம் வரின், நிலைமொழி உகரம், "இ"கரமாகத் திரிந்து தன்மாத்திரை அளவில் குறைந்து ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும்

(எகா) வண்டு + யாது = வண்டியாது (டு= ட்+ உ + இ = டி)
வரகு + யாது = வரகியாது

- ❖ அதற்கடுத்து,
குற்றியலிகரம் கேண்மியா, சென்மியா ஆகியவற்றில் வரும்.
- ❖ மியா என்னும் அசைச்சொல்லில் உள்ள இகரமும் ( மி - ம் + இ) தன்மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் இதுவும் குற்றியலிகரம்தான்

> யகரம் வரக் குறள் உத்திரி இகரமும்
> அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய
> \- நன்னுல்

## ⇔ முற்றியலுகரம்

- ❖ தனக்குரிய 1 மாத்திரை அளவிலிருந்து குறையாத உகரம் முற்றியலுகரம் எனப்படும்.
  1. பகு, பசு, படு, அது, தபு, பெறு இவை தனிக்குறில் எழுத்தை அடுத்த வரும் வல்லினம் உகரம் பெற்ற முற்றியலுகரம்
  2. காணு, உண்ணு, உருமு - இவற்றின் ஈற்றிலுள்ள மெல்லின உகரங்கள்
     ( ணு - ண் + உ, மு - ம் + உ )
  3. எழு, தள்ளு, கதவு - இவற்றின் ஈற்றிலுள்ள இடையான உகரங்கள் முற்றியலுகரங்கள்
- ❖ மேற்கண்ட மூன்றும் முற்றியலுகரங்கள் எனப்படும்.

## ⇔ ஐகாரக்குறுக்கம்

- ❖ ஐம்பது - சொல்லுக்கு முதலில் வந்து 1 ½ மாத்திரை வந்தது
- ❖ தலைவன் - சொல்லுக்கு இடையில் வந்து 1 மாத்திரை வந்தது

www.Padasalai.Net
SANTHANA TNPSC 8760273175

- கடலை - சொல்லுக்கு ஈற்றில் வந்து 1 மாத்திரை வந்தது.
- இவ்வாறு சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் ஐகாரம் தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்
- இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் "ஐகாரகுறுக்கம்" எனப்படும்

## ⇔ ஔகாரக்குறுக்கம்

- 'ஔ' என்னும் எழுத்து சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும். அப்போது இயல்பான ( தனியாக) 2 மாத்திரையிலிருந்து 1 ½ மாத்திரையாக ஒலிக்கும்
- (எகா) ஔவை, வௌவல் - 1 ½ மாத்திரை.
- சொல்லுக்கு இடையிலும் , இறுதியிலும் ஔகாரம் வராது.

## ⇔ மகரக்குறுக்கம்

- ' ம் ' என்னும் மெய் எழுத்து தன்மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தல் மகரகுறுக்கம் எனப்படும்
- ' ம் ' என்னும் மெய்யெழுத்து தனக்குரிய ½ மாத்திரையிலிருந்து மகரக்குறுக்கத்தில் ¼ மாத்திரையாக ஒலிக்கும்

(எகா) போலும் - போல்ம - போன்ம்
மருளும் - மருள்ம் - மருண்ம்

- "ம"கர ஈற்றுச்சொல் முன் "வ"கர (வ்) முதல்மொழி வந்து சேரும்போது நிலைமொழி மகரம் குறைந்து ஒலிக்கும்.
- (எகா)

| வரும் + வண்டி = வரும்வண்டி |
|---|

- இவ்விரு இடங்களில் குறைந்து ஒலிக்கும் மகரமே மகரகுறுக்கம் எனப்படும்.

## ⇔ ஆய்தக்குறுக்கம்

- ஆய்தக்குறுக்கம் = ஆய்தம் + குறுக்கம்
- நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் "ல" கர "ள" கரங்கள்

வருமொழியிலுள்ள ' த ' கரத்தோடு (த்) சேரும்போது ஆய்தமாகத் திரியும்.

- இவ்வாறு திரிந்த ஆய்தம் தன்னுடைய ½ மாத்திரையிலிருந்து ¼ மாத்திரையாக ஒலிக்கும் .
- பிறகு, வருமொழியிலுள்ள தகரம் (த்) நிலைமொழிக்கேற்ப 'ற' கரமாகவும் (ற்) , டகரமாகவும் (ட்) புணரும்.

(எகா) கல் + தீது = கஃறீது, முள் + தீது = முஃடீது.

www.Padasalai.Net SANTHANA TNPSC. 8760273175